புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்

38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,

Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.

No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061

Cell: 7810068421,9488420449

neethiPress@ gmail.com

மலர்: 01 · இதழ்: 186 · 10-01-2026 · சனி · பக்கம்- 4 · விலை- ரூ.5 · திருச்சி

Volum 01 · Issue: 186 · 10-01-2026 · Saturday · Pages - 4 · Price- Rs. 5 · Trichy


## உலகளவில் முன்னணியில் இருப்பதை நோக்கி ஏஐ நிறுவனங்கள் செயல்பட பிரதமர் மோடி வேண்டுகோள்



புதுடெல்லி: ஜன.10–

இந்திய செயற்கை நுண்ணறிவு (ஏஐ) ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், உலகளவில் முன்னணியில் இருப்பதை நோக்கி செயல்பட வேண்டும் என பிரதமர் மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

அனைவருக்கும் செயற்கை நுண்ணறிவு: உலகளாவிய தாக்கம்' குறித்த உச்சி மாநாடு அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு இந்திய ஏஐ ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் தலைவர்களுடன் நடைபெற்ற கூட்டத்துக்கு பிரதமர் மோடி தலைமை தாங்கினார்.

இந்த கூட்டத்தில் அவதார், பார்த்ஜென், ஃப்ராக்டல், கான், ஜென்லூப், இன்டெலிஹெல்த், சர்வம், டெக் மஹிந்திரா, ஜென்டீக் உட்பட பல ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் சிஇஓ.க்கள் பங்கேற்றனர்.

மத்திய மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், இணையமைச்சர் ஜிதின் பிரசாதா ஆகியோரும் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

அப்போது பிரதமர் மோடி கூறியதாவது: ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், செயற்கை நுண்ணறிவு தொழில்முனைவோர் ஆகியோர் நாட்டின் எதிர்காலத்தை இணைந்து உருவாக்குபவர்கள். சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் செயற்கை நுண்ணறிவு முக்கியமானதாக உள்ளது. ஏஐ உச்சி மாநாட்டை இந்தியா அடுத்த மாதம் நடத்துவதன் மூலம், தொழில்நுட்ப துறையில் இந்தியா முக்கிய பங்காற்றுகிறது.

செயற்கை நுண்ணறிவை மேம்படுத்தி மாற்றத்தை கொண்டுவர இந்தியா முயற்சிகள் எடுக்கிறது. புதுமைகளை கண்டுபிடித்து அவற்றை மிகப் பெரியளவில் அமல்படுத்தும் திறன் நம் நாட்டில் அதிகமாக உள்ளது. உலகுக்கு தனிச்சிறப்பான ஏஐ மாடலை இந்தியா அளிக்க வேண்டும். உலகுக்காக இந்தியாவில் தயாரிப்பதை அது பிரதிபலிக்க வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

## "நாடாளுமன்றம் ஜன.28ம் தேதி கூடுகிறது: பிப்.1 பட்ஜெட் தாக்கல்",

"புதுடெல்லி, ஜன.10–

கடந்த 2017ம் ஆண்டு முதல் மத்திய பட்ஜெட் பிப்ரவரி 1ந்தேதி தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. அதற்கு முன்பு பிப்ரவரி மாதத்தின் கடைசி நாளில் தான் பட்ஜெட் தாக்கல் செய்யப் பட்டது. ஆண்டு இந்த பிப்ரவரி 1ந்தேதி ஞாயிற்றுக்கிழமை வருகிறது. இதனால் 2026– 27ம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் அன்றைய தினம் செய்யப்படுமா? என்ற கேள்வி எழுந்தது. இந்த நிலையில் நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் ஜனவரி 28 ஆம் தேதி தொடங்கும் என்றும், மத்திய பட்ஜெட் பிப்ரவரி 1 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவால் இறுதி செய்யப்பட்ட தற்காலிக அட்டவணையை மேற்கோள் காட்டி, நாடாளுமன்ற 'பட்ஜெட் கூட்டத்தொடர் வருகிற 28 ந்தேதி ஜனாதிபதி திரவு பதி முர்மு உரையுடன் தொடங்குகிறது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அடுத்த நாள் 29ந்தேதி பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. ஜனவரி 30 மற்றும் 31 ஆகிய தேதிகள் விடுமுறை நாட்களாகும். பிப்ரவரி 1ந்தேதி பட்ஜெட் தாக்கல் ஆகிறது.ஜனாதிபதி உரை மற்றும் மத்திய பட்ஜெட் மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதங்களுக்குப் பிறகு, பட்ஜெட் கூட்டத்தொடர் பிப்ரவரி 13 ம் தேதி பிறகு ஒரு மாத கால விடுமுறைக்கு ஒத்திவைக்கப்படும். தொடர்ந்து நாடாளுமன்றம் மார்ச் 9 அன்று மீண்டும் கூடி ஏப்ரல் 2 ஆம் தேதி இந்த ஆண்டிற்கான பட்ஜெட் கூட்டத்தொடர் நிறைவடைகிறது. ",

# இதுவரை 404 வாக்குறுதிகள் நிறைவேற்றம்

## உங்க கனவ சொல்லுங்க' திட்ட தொடக்க விழாவில் மு.க.ஸ்டாலின் தகவல்

திருவள்ளூர்: ஜன.10–

2021 சட்டப்பேரவை தேர்தலில் கொடுத்த 505 வாக்குறுதிகளில் 404 வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். இந்த சாதனையை செய்தது திராவிட மாடல் என்று 'உங்க கனவ சொல்லுங்க..' திட்டத்தை இன்று திருவள்ளூர் மாவட்டம் பாடியநல்லூரில் தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.




தமிழக அரசு கடந்த 5 ஆண்டுகளில் அமல்படுத்தப்பட்ட பல்வேறு அரசு திட்டங்களில் பயனடைந்துள்ள பயனாளிகளின் தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், அத்திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும் அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும், 'உங்க கனவ சொல்லுங்க' என்ற புதிய திட்டம் தொடக்க விழா இன்று காலை திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றம் அருகே பாடியநல்லூரில் நடைபெற்றது.

இதில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட உள்ள, 'உங்க கனவ சொல்லுங்க..' திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: தமிழக வரலாற்றில் இன்றைக்கு மிக மிக முக்கியமான நாள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசு, மக்களின் கனவுகளை கேட்டு, அதையெல்லாம் நிறைவேற்ற தொடங்கும் நாளாக இந்நாள் அமைந்திருக்கிறது.

2021 சட்டப்பேரவை தேர்தலுக்கு முன்பு, திருச்சியில் நடந்த திமுக மாநாட்டில், வளரும் வாய்ப்புகள் வளமான தமிழ்நாடு, மகசூல் பெருக்கம் மகிழும் விவசாயி, குடிமக்கள் அனைவருக்கும் குறையாத தண்ணீர், அனைவருக்கும் உயர்தரக் கல்வி மற்றும் உயர்ந்த மருத்துவம், எழில்மிகு மாநகரங்களின் மாநிலம், உயர்தர ஊரகக் கட்டமைப்பு உயர்ந்த வாழ்க்கைத் தரம், அனைவருக்கும் அனைத்துமான தமிழ்நாடு என, 7 வாக்குறுதிகளை அளித்தேன்.

அதையெல்லாம், தற்போது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். சொன்னால், சொன்னதை செய்பவன்தான் இந்த ஸ்டாலின். பொருளாதாரத்தை உயர்த்துவோம் என்று சொன்னேன். இன்றைக்கு, தமிழகம் 11.19 விழுக்காடு வளர்ச்சியுடன் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக இருக்கிறது. அதேபோல், விவசாயம் லாபம் தரும் தொழிலாக மாறியிருக்கிறது.

இந்தியாவிலேயே கல்விக்காக தமிழகம் செய்யும் அளவுக்கு எந்த மாநிலமும் செலவு செய்வதில்லை என்று பெருமையுடன் சொல்லும் அளவுக்கு மாதிரி பள்ளிகள், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம் என்று பல திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். தமிழகம் இப்போது மருத்துவ சுற்றுலா மையமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் மட்டும்தான் தலைநகர், முதல் நிலை நகரங்கள் மட்டுமல்லாமல், 2ம் நிலை, 3ம் நிலை நகரங்களும் வளர்ந்திருக்கிறது; நகரங்கள் பேரூர்கள் மட்டுமல்லாமல், கிராமங்களும் வளர்ந்திருக்கின்றன. இது எல்லாவற்றுக்கும் மேல், சமூகநீதி அரசை திமுக நடத்திக் கொண்டிருக்கிறது.

பட்டியலின மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மையின மக்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர், விளிம்பு நிலை மக்கள் என, எல்லோருக்கும் பார்த்துப் பார்த்து திமுக அரசு செய்து கொண்டிருக்கிறது.

தமிழகத்துக்கும், தமிழர்களுக்கும் எதிராக மட்டுமே செயல்படும் பாஜக தொடர்ந்து மத்தியில் ஆட்சியில் இருந்து வருகிறது. தமிழகத்துக்கும், மத்திய அரசுக்கும் பாலமாக இருக்க வேண்டிய ஆளுநர், மக்களின் எண்ணங்களை பிரதிபலித்து, சட்டப் பேரவையில் நிறைவேற்றும் சட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதே தன் முதல் வேலையாக வைத்துள்ளார்.

இத்தனையையும் மீறி, மக்கள் எங்கள் கூடவே இருப்பதால்தான் 2021 சட்டப்பேரவை தேர்தலில் கொடுத்த 505 வாக்குறுதிகளில் 404 வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறோம். இந்த சாதனையை செய்தது திராவிட மாடல்.

மக்கள் தேவைகளை உணர்ந்து, நல்ல பல திட்டங்களை செய்துகொண்டிருக்கும் திராவிட மாடல் அரசிடம் மக்கள் தங்களின் கனவுகளை சொல்ல வேண்டும் என் பதற்காக உருவாக்கப் பட்ட திட்டம்தான், 'உங்க கனவ சொல்லுங்க' திட்டம்.

இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்பங்களையும் அரசின் சார்பில் தன்னார்வலர்கள் சந்திப் பார்கள். அவர்களிடம் உங்களின் கனவுகளை சொல்லுங்கள். அதையெல்லாம் அவர்கள் டிஜிட்டல் முறையில் பதிவு செய்துகொள்வார்கள். அது எல்லாவற்றையும் ஆய்வு செய்து, தமிழ்நாட்டுக்கான ஒரு மாபெரும் கனவுத் திட்டத்தை அறிவிக்கப் போகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

## மீண்டும் திராவிட மாடல் 2.0 அமையும்; திமுக கூட்டணிக்கு வாக்களிக்க மக்கள் தயாராகி விட்டனர்: அமைச்சர் கீதாஜீவன் உறுதி

தூத்துக்குடி: ஜன.10–

திமுக கூட்டணிக்கு வாக்களிக்க தமிழக மக்கள் தயாராகி விட்டனர். மீண்டும் திராவிட மாடல் ஆட்சி 2.0 அமையும் என்று தூத்துக்குடியில் அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்தார்.

தூத்துக்குடி டூவிபுரத்தில் அவர், நிருபர்களிடம் கூறியதாவது: தமிழ்நாட்டில் 5 ஆண்டுகாலமாக மாதம் மும்மாரி பொழிந்து கொண்டிருக்கிறது. தமிழகம் வளர்ச்சியடைந்து உள்ளது. எல்லா வகையிலும் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு இருக்கிறது. திராவிட மாடல் ஆட்சியில் மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

தமிழகத்தில் மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையும் என்பதில் சந்தேகமில்லை. மக்கள் திமுக கூட்டணிக்கு வாக்களிக்க தயாராகி விட்டனர். மக்கள் தொகை அடிப்படையில் ஒதுக்கக் கூடிய கல்வி நிதி, 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தின் நிதியை தராமல் ஒன்றிய அரசு தமிழக மக்களை வஞ்சித்து வருகிறது என்றார்.



அமைச்சர் முத்துசாமி ஈரோடு மாவட்டம், நந்தா கலை மற்றும் அறிவியல் கலலூரியில் நடைபெற்ற உங்கள் கனவை சொல்லுங்க நிகழ்ச்சியை தொடங்கி வைத்து தன்னார்வலர்களுக்கு விண்ணப்பப்படிவங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடாசலம், மாநகராட்சிமேயர் நாகரத்தினம் சுப்பிரமணி, மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், திட்ட இயக்குனர் மலர் விழி உட்பட பலர் உள்ளனர்.

## பட்டாபிராம் டிஆர்பிசிசி இந்து கல்லூரியில் "உலகம் உங்கள் கையில்" உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் 2034 மாணவர்களுக்கு மடிக்கணினிகள்

## அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்

திருவள்ளூர் ஜன 10 :

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், பட்டாபிராம் டிஆர்பிசிசி இந்து கல்லூரியில் தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டமான "உலகம் உங்கள் கையில்" உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் 2034 மாணவர்களுக்கு மடிக் கணினிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமையில் வழங்கி பேசினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மாணவர்கள் கல்வியிலும் கணினி அறிவியலிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக "உலகம் உங்கள் கையில்" என்னும் இந்த மகத்தான திட்டத்தை தொடங்கியுள்ளார்கள். செயற்கை நுண்ணறிவு வளர்ந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையில் மாணவர்கள் கணினி அறிவியலில் சிறந்து விளங்க வேண்டும். வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொண்டு மாணவர்கள் எதிர்காலத்திற்கு ஏற்றவாறு தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழியில் கல்வி கற்று உலகத்தையே கைக்குள் கொண்டு வந்தவர்கள் கூகுள் தலைமை செயல் அதிகாரி திரு.சுந்தர் பிச்சை ஆவார். அதேபோன்று திரு. மயில்சாமி அண்ணாதுரை, திருமதி. வனிதா முத்தையா, வீரமுத்துவேல் ஆகியோரும் இரு மொழியில் கல்வி கற்று விண்வெளி துறையில் சிறந்து விளங்கினார்கள். அணு ஆயுதத்தில் பெரும் மாற்றத்தை கொண்டுவந்து உலக அரங்கில் இந்தியாவை வல்லரசு நாடாக மாற்ற பெரிதும் உதவிய டாக்டர். அப்துல்கலாம் அவர்களும் தமிழர் தான். இலக்கண இலக்கியங்கள் நிறைந்த நம் தமிழ்மொழியில் கல்வி கற்று மாணவர்கள் உலக அரங்கில் தமிழ்மொழிக்கு பெருமை சேர்த்திட வேண்டும்.

மாணவர்கள் கற்பதன் மூலமாக மட்டுமே எதிர்காலத்தில் சிறப்பாக இருக்க முடியும் என்பதற்காகவே தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் என அமைச்சர் கூறினார்.

இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி (பூவிருந்தவல்லி), டி.ஜே.கோவிந்தராஜ் (கும்மிடிப்பூண்டி), ஆவடி மாநகராட்சி மேயர் கு. உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை.ஜெயகுமார், உதவி இயக்குநர் (பயிற்சி) பி.மோகன், கல்லூரி முதல்வர் கல்விக்கரசி, கல்லூரிகளின் முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் திரளான மாணவ, மாணவிகள் கலந்துக்கொண்டனர்

# வந்தவாசியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ 3000 ரொக்கத்துடன் பொங்கல் தொகுப்பு: எம்பி, எம்எல்ஏ வழங்கினர்



வந்தவாசி, ஜன10

பொங்கல் பண்டிகை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பாக பச்சரிசி 1 கிலோ, சர்க்கரை 1கிலோ, வேட்டி, சேலை, முழு கரும்புடன் ரூபாய் 3000 ரொக்கமாக வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தர விட்டிருந்தார். இந்தப் பொங்கல் பரிசு தொகுப்பு நேற்று முதல் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க நியாய விலைக் கடையில் பொங்கல் பரிசு தொகுப்பு நேற்று வழங்கப்பட்டது. ஆரணி எம்பி எம்.எஸ். தரணிவேந்தன், எம்எல்ஏ எஸ்.அம்பேத்குமார் ஆகியோர் பங்கேற்று பொங்கல் தொகுப்பினை அட்டைதாரர்களுக்கு வழங்கினர். மேலும் இந்த நிகழ்ச்சியில் மேலாண்மை இயக்குநர் எஸ்.ராஜா, சார்பதிவாளர்கள் கலைவாணி, அனிதா, மேலாளர் காலேஷா, நகர செயலாளர் தயாளன், நகர் மன்ற தலைவர் ஜலால், துணைத் தலைவர் அன்னை சீனிவாசன், விற்பனையாளர் நாராயணன், கவுன்சிலர் கிஷோர் குமார் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# திருமுருகன்பூண்டி நகராட்சி அலுவலக கட்டடத்தினை செய்தித் துறை அமைச்சர் மற்றும் தமிழ் வளர்ச்சி துறை மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்



திருப்பூர் .ஜன.10–

மு.பெ.சாமிநாதன் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள திருமுருகன் பூண்டி நகராட்சி அலுவலக கட்டடத்தினை திறந்து வைத்தார். மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் திருப்பூர் மாவட்டம், திருமுருகன் பூண்டி நகராட்சி, இராக்கியா பாளையம் சாலையில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கட்டடத்தினை திறந்து வைத்தார்கள். மு.பெ. சாமிநாதன் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். நமது மாவட்டங்களில் இருக்கக்கூடிய திட்டப் பணிகளை அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். கள். அந்த வகையில் திருமுருகன் பூண்டியில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள நகராட்சி அலுவலக கட்டடத்தினை துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

திருமுருகன்பூண்டியில் தரைதளத்தில் 7107.95 சதுர அடி மற்றும் முதல் தளத்தில் 5631.65 சதுர அடி மொத்தம் 12739.60 சதுர அடியில் புதிய நகராட்சி அலுவலக கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடத்தில் ஆணையாளர் அறை வரி வசூல் மையம், பொதுப்பிரிவு, பொது சுகாதார பிரிவு, கணினி பிரிவு மற்றம் நகர்மன்றத் தலைவர் அறை ஆகியவை தரை தளத்திலும் பொறியாளர் அறை, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, வருவாய் பிரிவு நகர்மன்ற கூட்டம் அறை மற்றும் காணொளிக்காட்சி அறை ஆகியவை முதல் தளத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மு.பெ. சாமிநாதன் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து, மு.பெ. சாமிநாதன் அவர்கள் திருமுருகன்பூண்டி நகராட்சி, இராக்கியா பாளையம் சாலையில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கட்டடத்தினை திறந்து வைத்து குத்துவிளகேற்றி வைத்தார்கள். முன்னதாக, மு.பெ. சாமிநாதன் திருப்பூர் மாநகராட்சி, ராக்கியபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரொக்கப்பணம், பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் இலவச வேட்டி, சேலைகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், மண்டல இயக்குநர் (நகராட்சி நிர்வாகம்) ராஜாராம், திருமுருகன்பூண்டி நகர்மன்றத்தலைவர் குமார். திருமுருகன் பூண்டி நகராட்சி ஆணையார் (பொ) பால்ராஜ், நகராட்சி பொறியாளர் ராமசாமி. உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

# பொங்கல் தொகுப்பு வழங்கல்



பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழக அரசு அறிவித்துள்ள முழு கரும்புடன் கூடிய பொங்கல் தொகுப்பு மற்றும் 3000 ரூபாய் ரொக்கம் ஆகியவற்றை பொதுமக்களுக்கு, நாமக்கல் மாவட்டம் ஆலம்பாளையம் பகுதியில் நடைபெற்ற பொங்கல் தொகுப்பு வழங்கும் விழாவில், ஆலம்பாளையம் பேரூர் திமுக செயலாளர் எஸ் பி கார்த்திராஜ் வழங்கினார். அருகில் திமுக பேரூர் நிர்வாகிகள் மற்றும் வார்டு நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டத்தில் இயங்கிவரும் RAHEL அறக்கட்டளை மற்றும் REHLS சொசைட்டி ஆகியவை இணைந்து செயல்படுத்தும் இரண்டு லட்சம் பனை விதைகள் நடும் திட்டத்தின் துவக்க விழா (08.01.2026) விழுப்புரம் அடுத்த விக்கிரவாண்டி தாலுகாவிற்கு உட்பட்ட ஒரத்தூர் கிராமம் முள்ளங்கி ஏரிக்கரையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட கவுன்சிலர் திருமதி மீனா வெங்கடேசன், ஒரத்தூர் பஞ்சாயத்து தலைவர் திருமதி எல்.பி.எஸ். லதா பிரபு, யூனியன் கவுன்சிலர் திருமதி டி. நளினி ஜெயச்சந்திரன், பஞ்சாயத்து துணை தலைவர் திருமதி கே. சுனிதா கண்ணதாசன் ஆகியோர் இணைந்து பனை விதைகள் நட்டு திட்டத்தை அதிகாரபூர்வமாக துவக்கி வைத்தனர். இந்த துவக்க விழாவின் போது, ஒரே நாளில் 1000க்கும் மேற்பட்ட பனை விதைகள் முள்ளங்கி ஏரிக்கரையின் முழு பரப்பளவிலும் நடப்பட்டன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நீர்வள மேம்பாட்டை நோக்கமாகக் கொண்ட இந்த திட்டம் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்நிகழ்வில் RAHEL அறக்கட்டளையின் சேர்மன் திரு பிராஸ்பர் பக்த டைடஸ், செயலாளர் சுரேஷ்குமார், ஆலோசகர் இமாம் காசிம், பொருளாளர் சந்திரசேகர், செய்தித் தொடர்பாளர் மனாசேராஜ், செயற்குழு உறுப்பினர் வி. தீனு, விக்கிரவாண்டி ஒன்றிய மாற்றுத்திறனாளிகள் சங்கத் தலைவர் டி. மகுடமணி, REHLAS சொசைட்டியின் பொருளாளர் காஜலரிதா, பொதுச்செயலாளர் சுப்பரமணியன், கமலவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மேலும், 100க்கும் மேற்பட்ட கிராம மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பனை விதைகள் நட்டதில் பங்கெடுத்துக் கொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான தங்களின் ஆதரவை வெளிப்படுத்தினர். இந்த இரண்டு லட்சம் பனை விதைகள் நடும் திட்டம், வருங்காலத்தில் இயற்கை வளங்களை பாதுகாக்கவும், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், கிராமப்புற பொருளாதார வளர்ச்சிக்கும் பெரிதும் துணைபுரியும் என அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

# கள்ளக்குறிச்சியில் ரூ. 2,325 கோடி முதலீட்டில் புதிய காலணி தயாரிப்பு ஆலையின் 2ம் கட்ட பணிகள் தொடக்கம்

கள்ளக்குறிச்சி : ஜன.10

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ரூ. 2,325 கோடி முதலீட்டில் புதிய காலணி தயாரிப்பு ஆலையின் 2ம் கட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 27,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலகின் மிகப்பெரிய காலணி உற்பத்தியாளர்களில் ஒன்றான தைவானைச் சேர்ந்த பௌசென் குழுமம், இந்தியாவிற்காக காலணிகளை உற்பத்தி செய்வதற்காக கள்ளக்குறிச்சியில் உற்பத்தி ஆலையை அமைக்க தொடங்கி உள்ளது. சாத்தனூர் சிப்காட்டில் ரூ.2,325 கோடி முதலீட்டில் தைவான் ஆலையின் இரண்டாம் கட்டத்திற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.இதன் மூலம் 27,000 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாகும். இது தமிழ்நாட்டின் காலணி உற்பத்தி துறைக்கு மற்றொரு மைல்கள் ஆகும். காலணி மற்றும் உற்பத்தி, சுற்றுசூழல் அமைப்பில் முன்னணியில் இருக்கும் தமிழ்நாடு, உலகளாவிய நிறுவனங்கள், மேம்பட்ட உற்பத்தி திறன்கள், பெரிய அளவிலான வேலை வாய்ப்புகளை தொடர்ந்து ஈர்த்து வருகிறது. வலுவான உட்கட்டமைப்பு, திறமையான மனித வளம் மற்றும், முன்னெச்சரிக்கை கொள்கைகளால் தொழிற்துறை முதலீடுகளுக்கு விருப்பமான இடமாக தமிழ்நாட்டின் நற்பெயரை மேலும் வலுப்படுத்துகிறது.

# ஈரோடு சந்தையில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.500 அதிகரித்து ரூ.16,500 ஆக விற்பனை!

ஈரோடு: ஈரோடு சந்தையில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.500 அதிகரித்து ரூ.16,500 ஆக விற்பனையானது. கடந்த வாரம் ரூ.16,000 ஆக இருந்த மஞ்சள் விலை இன்று ரூ.500 அதிகரித்து விற்பனையாகி வருகிறது. இரண்டு மாதங்களில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.2500 வரை அதிகரித்துள்ளது. புது மஞ்சள் வரத்து குறைந்த நிலையில், தேவை அதிகரிப்பு காரணமாக விலை உயர்ந்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி மூலம் 3 ஏரிகளில் மீன்பாசி குத்தகை நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தகவல்.

கள்ளக்குறிச்சி ஜன 10

கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளக்குறிச்சி வட்டத்தில் ஆலத்தூர் மற்றும் தென்கீரனூர் ஆகிய 2 ஏரிகள், சங்கராபுரம் வட்டத்தில் தேவபாண்டலம் ஏரியும் மொத்தம் 3 ஏரிகள் www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி மூலம் 3 ஆண்டுகளுக்கு மீன்பாசி குத்தகை விடப்பட உள்ளன.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகம், நெ.62/56கி, தாட்கோ வளாகம், விழுப்புரம்605 602, fishermenwelfarevpm@gmail.com என்ற இணையதளத்திலும், 04146259329 என்ற தொலைபேசி எண்ணிலும், விழுப்புரம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகிடலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

# திருவரங்கத்தில் ஆட்டோவில் புகையிலை பொருட்கள் கடத்தல் இரண்டு பேரை பிடித்து விசாரணை:

திருச்சி ஜன 10

திருச்சி, திரவரங்கம் பகுதியில் போலீசார் ரோந்து சென்ற போது போலீசாரை பார்த்தவுடன் ஆட்டோவின் அருகே இருந்த இரண்டு நபர்கள் திடீரென்று ஓட்டம் பிடித்தனர்.இதனைப் பார்த்து சந்தேகம் அடைந்த போலீசார் அந்த இரண்டு நபர்களை துரத்தி பிடித்தனர்.பிறகு ஆட்டோவில் சோதனை செய்த போது 125 கிலோ குட்கா பிடிப்பட்டது . இதைத் தொடர்ந்து போலீசார் அவர்கள் இரண்டு பேரையும் பிடித்து விசாரணை செய்து வருகின்றனர்.

# மணப்பாறை அருகே பொங்கல் தொகுப்பு வழங்கிய அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி. பொங்கல் தொகுப்புடன் ரூ.3000 பணத்தை பெற்றுக் கொண்டு மகிழ்வுடன் சென்றனர்.



.தமிழகம் முழுவதும் பொதுமக்களுக்கு தமிழக அரசு. பொங்கல் தொகுப்புடன் ரூபாய் 3000 ஆயிரம் ரொக்கப் பணமும். இன்று தமிழகம் முழுவதும் ரேசன் கடைகளில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே உள்ள பண்ணப்பட்டி சமத்துவபுரத்தில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்புடன் அரசு அறிவித்த ரொக்கப்பணமும் வழங்கினார். தமிழக அரசு கொடுத்து வரும் பொங்கல் தொகுப்புகளை பொதுமக்கள் மிகுந்த மகிழ்வுடன், பெற்றுச் சென்றனர். விழாவில் மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் சல்மா, மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்சமது மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# இராஜா நந்திவர்மன் கலைக் கல்லூரி சார்பில் நடைபெற்ற சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை கலைமாமணி முனைவர் வி.முத்து கொடியசைத்து தொடங்கி வைத்தார்





வந்தவாசி , ஜன10:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் இராஜா நந்திவர்மன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் நடைபெற்ற சாலைப் பாதுகாப்பு மற்றும் தலைக் கவசம் அணிதல் விழிப்புணர்வு பேரணியை கல்லூரி தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து கொடியசைத்து தொடங்கி வைத்தார். தெள்ளார் காவல் நிலையத்தில் இருந்து அம்பேத்கர் சிலை வரை நடைபெற்ற இப்பேரணிக்கு கல்லூரி இயக்குனர்கள் எஸ்.அப்பாண்டைராஜன், அருள் முருகன், பொருளாளர் எஸ்.பழனிச்சாமி, சுவாமி விவேகானந்தா ஐடிஐ முதல்வர் பி.ஏழுமலை, சாலை பாதுகாப்பு திட்டம் ஒருங்கிணைப்பாளர் மு.பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி முதல்வர் முனைவர் இரா.ஏழுமலை வரவேற்றார். மேலும் இந்த நிகழ்ச்சியில் தெள்ளார் சப் இன்ஸ்பெக்டர்கள் பாபு, தமிழ்ச்செல்வி ஆகியோர் கருத்துரை வழங்கினர். இந்த பேரணியில் 200 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவிகள் பங்கேற்றனர். இதில் சாலைப் பாதுகாப்பு முறைமைகள் பற்றிய விழிப்புணர்வு தகவல்களை கல்லூரி தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து மாணவர்களுக்கு வழங்கினார். மேலும் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டது. கல்லூரி இயக்குநர் டிகேஜி ஆனந்தன் நிகழ்வை தொகுத்து வழங்கினார். இறுதியில் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர்.ஜெயப்பிரகாஷ் நன்றி கூறினார்.

# ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில இளைஞர் அணி மாணவர் அணி அமைப்பாளர்கள் நியமனம்

## மாநில தலைவர் ஆர் எல் வெங்கட்ராமன் அறிவிப்பு

புதுச்சேரி, ஜன.10–

புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கட்சி வளர்ச்சியை கருத்தில் கொண்டு மாநில அளவில் பல அணிகளை உருவாக்குகின்ற வகையில் கடந்த ஞாயிறு அன்று மாநில மகளிர் அணிக்கு அமைப்பாளர் நியமனம் செய்து அறிவித்தோம். அதன் தொடர்ச்சியாக தற்போது மாநில இளைஞர் அணி மற்றும் மாநில மாணவர் அணிக்கு அமைப்பாளர்களை நியமித்து அறிவித்துள்ளோம்.

மாநில இளைஞர் அணி அமைப்பாளர்: ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில இளைஞர் அணி அமைப்பாளராக உருளையன் பேட்டை தொகுதியை சார்ந்த K. ராஜா அவர்களை நியமனம் செய்து அறிவித்துள்ளோம். திரு. K.ராஜா அவர்கள் சபரி டிஜிட்டல் எனும் பேனர் தயாரிப்பு செய்து கொடுக்கும் வியாபாரம் செய்து வருகிறார்.



மேலும் சமூக பணியில் மிகுந்த ஆர்வம் உள்ளவர். வியாபார ரீதியாக புதுச்சேரி மாநில மக்களுடனும், இளைஞர்களிடம் நல்ல தொடர்பு வைத்துள்ளவர். சமூக சேவகர். ஆகவே K. ராஜா அவர்களை மாநில இளைஞர் அணி அமைப்பாளராக நியமித்து உள்ளோம்.

மாணவர் அணி அமைப்பாளர் : ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில மாணவர் அணிக்கு மாநில அமைப்பாளராக தட்டான்சாவடி தொகுதியை சார்ந்த திரு. ஆண்ரூ ஜோசப் அவர்களை மாணவர் அணியின் அமைப்பாளராக நியமித்து அறிவித்துள்ளோம். மாநில மாணவர் அணிக்கு அமைப்பாளராக நியமிக்கப் பட்டிருக்கும் திரு. ஆண்ரு ஜோசப் அவர்கள் BA.Bed. மற்றும் விகி.விகி படித்தவர். இன்றும் கூடுதலாக ஒரு எம் ஏ படித்து கொண்டிருப்பவர். மாணவர்கள் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர். கல்வியில் சிறந்த ஆர்வம் கொண்டவர். அனைத்து கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் மத்தியில் நன்கு பழகி நல்ல தொடர்பு வைத்துள்ளவர். மாணவர்களின் வளர்ச்சி மற்றும் எதிர்காலத்தை பற்றி மிகுந்த அக்கறை கொண்டவர் என்கிற காரணத்தினால் அவரை மாணவர் அணியின் மாநில அமைப்பாளராக நியமித்து உள்ளோம். அறிவிப்பின் போது உடன் சிவக்குமரன், கோமதி, சுப்ரமணியன் , வாசுகி, முருகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

ஆகவே கழக தொண்டர்கள் அனைவரும் ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில இளைஞர் அணி மற்றும் மாநில மாணவர் அணி அமைப்பாளர்கள் இருவருக்கும் முழு ஒத்துழைப்பு கொடுத்து கட்சி வளர்ச்சிக்கு உதவும் வகையில் செயல்பட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

# மணப்பாறை அரசு கலை அறிவியல் கல்லூரியில் 238 மாணவர்களுக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விலையில்லா மடிக்கணினிகள் வழங்கினார்.



திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே பன்னாங்கொம்பில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கல்லூரி மாணவர்களுக்கான விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. விழாவில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மாணவர்களுக்கு மடிக்கனிணிகளை வழங்கினார்.

தமிழக அரசின் கல்லூரி மாணவர்களுக்கான விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின்கீழ் இக்கல்லூரியில் பயிலும் மூன்றாமாண்டு மாணவர்கள் 238 பேருக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர்.சல்மா, மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்சமது, கல்லூரி முதல்வர் முனைவர். மலர்மதி, பேராசிரியர்கள், கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# சேலம் மேச்சேரியில் எடப்பாடி பழனிசாமி பங்கேற்கும் பொங்கல் விழா : முன்னேற்பாடு பணிகள் தீவிரம்.

சேலம். ஜன.10–

சேலம் மாவட்டம் மேட்டூர் சட்டப் பேரவைத் தொகுதி மேச்சேரியில் வரும் 15ஆம் தேதி அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி பங்கேற்கும் பொங்கல் விழாவுக்கான முன்னேற்பாடு பணிகளை சேலம் புறநகர் மாவட்ட அதிமுக செயலாளர் ஆர்.இளங்கோவன் பார்வையிட்டார்.

கடந்த ஆண்டு வீரபாண்டி சட்டப் பேரவைத் தொகுதியில் எடப்பாடி கே.பழனிசாமி விவசாயிகளுடன் பொங்கல் பண்டிகையை கொண்டாடிய நிலையில் இந்த ஆண்டு மேச்சேரியில் ஜன. 15 ஆம் தேதி விவசாயிகளுடன் பொங்கள் பண்டிகையை கொண்டாடுகிறார்.

விழா நடைபெறும் இடத்தை சேலம் புறநகர் மாவட்ட அதிமுக செயலாளர் ஆர். இளங்கோவன், அதிமுக நிர்வாகிகள் ஆய்வு செய்தனர். அப்போது, மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ராஜா, அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் வெங்கடாசலம், ஜெயலலிதா பேரவை மாநில நிர்வாகி கே. கலையரசன், புறநகர் மாவட்ட மகளிர் அணி செயலாளர் லலிதா சரவணன், ஒன்றிய செயலாளர்கள் செல்வம், சந்திரசேகரன் பேரூர் செயலாளர் ஜெ.குமார் உள்பட பலர் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் கொப்பனாபட்டி நியாய விலை கடையில் தமிழக அரசின் பொங்கல் தொகுப்பாக ரூபாய் 3000ரொக்க பணத்துடன் ஒரு முழு நீள கரும்பு ,வேட்டி ,சேலைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் புதுக்கோட்டை திமுக தெற்கு மாவட்ட கழக சிறுபாண்மையினர் நலப்பிரிவு துணைத்தலைவர் சீமாட்டி அப்துல் லத்தீப் மற்றும் திமுக நிர்வாகி நடராஜன் ஆகியோர் உடன்இருந்தனர்.

# பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி..



அனுப்பர்பாளையம் ஜனவரி: 10

பொங்கல் விழாவினை மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் மு .க .ஸ்டாலின் 3 ஆயிரம் ரூபாய் வழங்கி மேலும் பொங்கல் தொகுப்பு பொருட்கள் அடங்கிய பரிசினை வழங்கி விழாவினை சென்னையில் துவக்கி வைத்தார். அதன் ஒரு பகுதியாக திருப்பூர் மாநகராட்சி 10வது வார்டுக்கு உட்பட்ட ஆத்துப்பாளையம் பகுதியில் உள்ள ரேஷன் கடையில் திருப்பூர் மாநகராட்சி 10வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி பிரேமலதா கோட்டா பாலு மற்றும் திமுக நிர்வாகி கோட்டா பாலு ஆகியோர் தலைமையில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. இதில் திமுக மூத்த உறுப்பினருமான நாகராஜ் மற்றும் வார்டு செயலாளர் சசிகுமார் கழகத் துணைச் செயலாளர் மணிமாறன் ரமேஷ் காயத்ரி நகர். பாலு. மனோகரன். செல்வம் ரெட்டி ஆனந்த் தண்டபாணி ராஜசேகர் நாகராஜ் சேகர் அருண்குமார் விக்னேஷ் பூபதி ரஞ்சித் குமார் மற்றும் கழக நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

# திருச்சியில் பரிதாபம் சாக்கடையில் மயங்கி விழுந்து வாலிபர் சாவு

திருச்சி ஜன 10

திருச்சி , உய்யக் கொண்டான் திருமலை கணபதி நகர் 1வது தெருவை சேர்ந்தவர் பெருமாள் (வயது 39) .இவர் நேற்று சண்முகா நகர் 1வது தெருவில் உள்ள ரேசன் கடைக்கு பொங்கப் பரிசுத்தொகுப்பு வாங்க சென்றார். அப்பொழுது

எதிர்பாராவிதமாக அவருக்கு திடீரென்று வலிப்பு ஏற்பட்டு அந்தப் பகுதியில் உள்ள சாக்கடையில் எதிர்பாராதமாக விழுந்து தலையில் பலத்த காயமடைந்தார். இதையடுத்து அவரை ஆபத்தான நிலையில் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

அங்கு அவரை பரிசோதனை செய்து பார்த்த டாக்டர் குழுவினர் பெருமாள் இறந்து விட்டதாக கூறினர்..இந்த சம்பவம் குறித்து பெருமாளின் மனைவி மாரியம்மாள் அரசு மருத்துவமனை போலீசில் புகார் கொடுத்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து பெருமாள் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் குறித்து அரசு மருத்துவமனை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காந்தி மார்க்கெட்டில் பரிதாபம் 15 வயது சிறுமி தீக்குளித்து தற்கொலை : போலீசார் விசாரணை

திருச்சி ஜன 10

திருச்சி ,ஜெயில் பேட்டையை சேர்ந்தவர் கந்தசாமி (வயது 42) இவரது 15 வயது மகள் கயல் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) இவர் கடந்த 23ந்தேதி சிறுமி கயல் வீட்டில் இருந்த பொழுது பீரோவில் இருந்த பணத்தை நீ எடுத்தியா என்று கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த

சிறுமி கயல் திடீரென்று மண்ணெண்ணையை உடம்பில் ஊற்றி தீயை பற்ற வைத்துக் கொண்டார். இந்த சம்பவத்தில்

படுகாயம் அடைந்த சிறுமி கயல் முதலில் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். பிறகு மேல் சிகிச்சைக்காக தஞ்சை மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த சிறுமி கயல் சிகிச்சை பலனின்றி நேற்று பரிதாபமாக இறந்தார்.இந்த சம்பவம் குறித்து காந்தி மார்க்கெட் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மணப்பாறை அருகே அரசு பேருந்து லாரி மோதிக் கொண்ட விபத்தில் சாலையில் சிதறிய தேங்காய்கள். அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய பயணிகள்



தஞ்சாவூர். ஜன.10–

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூராணியில் இருந்து தேங்காய் லோடு ஏற்றிக் கொண்டு லாரி ஒன்று பொள்ளாச்சி நோக்கி சென்று கொண்டிருந்தது. அந்த லாரி நள்ளிரவு 1 மணியளவில் திருச்சி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் மணப்பாறையை அடுத்த நொச்சிமேடு என்ற இடத்தில் சென்றபோது திடீரென ஓட்டுனர் லாரியை திருப்ப முயன்றதாக கூறப்படும் நிலையில் பின்னால் மன்னார்குடியில் இருந்து கம்பம் நோக்கி 38 பயணிகளுடன் சென்ற அரசு பேருந்து லாரியின் பின்பகுதியில் மோதியதில் லாரி சாலையின் நடுவே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பேருந்தின் முன்பகுதி சேதமடைத்துடன் இடிபாடுகளுக்குள் பேருந்து ஓட்டுனர் சிக்கிக் கொண்டார். இதையடுத்து சம்பவம் பற்றி தகவல் அறிந்த மணப்பாறை தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று ஓட்டுனரை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இந்நிலையில் லாரி சாலையில் கவிழ்ந்து அதிலிருந்த தேங்காயும் சாலையில் சிதறிக் கிடந்தது. இதையடுத்து மணப்பாறை நகராட்சி தூய்மை பணியாளார்கள் உடனடியாக களத்தில் இறங்கி சாலையில் உடைந்து சிதறிக் கிடந்த கண்ணாடி உள்ளிட்ட பொருட்களை அகற்றியதோடு சாலையில் உடைந்து கிடந்த தேங்காயும் அப்புறப்படுத்தினர். இதே போல் மணப்பாறை போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று போக்குவரத்தை சரி செய்யும் பணியில் ஈடுபட்டனர். இவ்விபத்தில் பேருந்தின் ஓட்டுனர் தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி, வரதராஜபுரத்தைச் சுரேஷ் (வயது 48) காயமடைந்த நிலையில் பேருந்தில் வந்த பயணிகள் ஒருசிலர் மட்டும் அதிஷ்டவசமாக சிறிய காயங்களுடன் உயிர் தப்பினர். பயணிகள் அனைவரையும் போலீசார் அந்த வழியாக வந்த வேறு பேருந்துகளில் அனுப்பி வைத்தனர். சம்பவம் தொடர்பாக மணப்பாறை போலீசார் வழக்கு பதிவு செய்து தப்பியோடிய லாரி ஓட்டுனரை தேடி வருகின்றனர்.

நள்ளிரவு நேரத்தில் நடைபெற்ற விபத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# 2 குழந்தைகளுக்கு தந்தையான நபரை திருமணம் செய்வேன் என அடம் பிடித்த மகள் இரவோடு இடவாக தந்தை செய்த கொடூரம்.

## ஆணவக் கொலையாக இருக்கலாம் என்று போலீசார் சந்தேகம்.

சேலம். ஜன. 10

சேலத்தில் தங்கி படித்து வந்த நெல்லையை சேர்ந்த ஹோமியோபதி மருத்துவ மாணவி காதல் விவகாரத்தில் மர்மமான முறையில் விடுதியில் உயிரிழந்து கிடந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் அடுத்த சித்தர் கோவில் அருகே சிவராஜ் தனியார் சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று செயல்பட்டு வருகின்றது. இங்கு திருநெல்வேலி வீரவநல்லூர் பாரதிநகரை சேர்ந்த வரதராஜன் என்பவருடைய மகள் வர்ஷினி (24) இறுதியாண்டு ஹோமியோபதி மருத்துவ படிப்பு படித்து வந்துள்ளார். இவர் கல்லூரி அருகே உள்ள பகுதியில் லட்சுமணன் என்பவரின் அடுக்குமாடி குடியிருப்பில் தோழியுடன் வாடகைக்கு தங்கி இருந்தார்.



இந்நிலையில் அவருடைய தோழி ஊருக்கு சென்று விட்டு நேற்று காலை அறைக்கு வந்த போது படுக்கையிலேயே வர்ஷினி உயிரிழந்து கிடந்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த தோழி சக நண்பர்களுக்கு தகவல் தெரிவித்தார். இது தொடர்பாக தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் மாணவியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

மாணவி விஷம் குடித்து உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. வர்ஷினியின் தந்தை வரதராஜன் நேற்று இரவு மகள் வர்ஷினியின் அறைக்கு வந்து ஒரு மணி நேரத்திற்கு மேலாக பேசிய உள்ளதாக போலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனால் அவருடைய செல்போன் எண்ணுக்கு போலீசார் அழைத்த போது ஸ்விட்ச் ஆஃப் என வந்துள்ளது. போலீசார் விசாரணையை தீவிர படுத்திய நிலையில் வர்ஷினி ஒருவரை காதலித்து வந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. இது தந்தை வரதராஜனுக்கு பிடிக்கவில்லை. மாணவியின் எல்லையை சேர்ந்த ஹோமியோபதி மருத்துவர் ஒருவரை காதலித்து வருவதாகவும் அவர் ஏற்கனவே திருமணம் ஆகி இரண்டு குழந்தைகள் உள்ள நிலையில் தற்போது தனியாக வசித்து வருகிறார் என்றும் தெரியவந்துள்ளது.

இந்த காதல் விவகாரம் வர்ஷினியின் தந்தைக்கு பிடிக்கவில்லை. இதனால் மகளின் விடுதிக்கு வந்த வரதராஜன் அவரிடம் காதல் தொடர்பாக வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். அதன்பிறகு மறுநாள் காலை வர்ஷினியின் தோழி வந்து கதவை திறந்த போது கதவு வெளிப்பக்கமாக தாளிடப்பட்டு இருந்தது. கதவைத் திறந்து பார்த்த போது தான் வர்ஷினி இறந்து கிடந்துள்ளார். எனவே வர்ஷினியை அவருடைய தந்தை தான் கொலை செய்திருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கும் நிலையில் அவரை தேடி வருகின்றன. இந்த கொலை ஆணவக் கொலையாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 4.45 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு

## அமைச்சர் எ.வ.வேலு வழங்கி தொடங்கி வைத்தார்.

கள்ளக்குறிச்சி ஜன 10

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை சார்பில் 4.45 லஞ்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பை அமைச்சர் எ.வ.வேலு வழங்கி தொடங்கி வைத்தார்.




ரிஷிவந்தியம் ஒன்றியம், முருக்கம்பாடி கிராமத்தில் கூட்டுறவு நியாயவிலைக் கடையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமை வகித்தார்.

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

பொதுப்பணி, நெடுஞ் சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கிப் பேசியதாவது:

முருக்கம்பாடி நியாயவிலைக் கடைகளில் 799 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.24.86 லட்சம் மதிப்பிலான பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படுகிறது.

மாவட்டத்தில் 598 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 168 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் என மொத்தம் 766 கடைகள் உள்ளன.

இந்த நியாயவிலைக் கடைகளில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதற்கு கள்ளக்குறிச்சி மாவட்டத்துக்கு ரூ.138.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

தகுதிவாய்ந்த 4,45,259 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் முகாம்களில் வசிக்கும் 74 பேரும் என மொத்தம் 4,45,333 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக மாநில அளவில் புகார்களை கட்டணமில்லா தொலைபேசி எண்கள் 1967, 18004255901 எண்களிலும், மாவட்ட அளவிலான புகார்களை 04151 228801 என்ற அலைபேசி எண்ணிலும் தெரிவிக்கலாம் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செ.அரவிந்த், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் சி.பெ.முருகேசன், மாவட்ட ஊராட்சித் தலைவர் இரா.புவனேஸ்வரி பெருமாள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் என்.ஜி.ஓ காலனி 2 ல், எஸ் சேகர் விற்பனையாளராக உள்ள நியாய விலை கடையில் தமிழர் திருநாளாம் தைப் பொங்கலை முன்னிட்டு அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் குடும்பங்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, முழு கரும்பு மற்றும் ரூ.3000 ரொக்கத்தொகை ஆகியவற்றை திருவள்ளூர் நகர மன்ற துணைத் தலைவரும் நகர கழக செயலாளருமான சி.சு. ரவிச்சந்திரன் வழங்கி தொடங்கி வைத்தார். இதில் ஆர்.ராஜ்பால், நரேஷ் குமார், கிளை செயலாளர் விஜயகுமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தவெக தேர்தல் அறிக்கை தயாரிக்க 12 பேர் கொண்ட குழு அமைப்பு: விஜய் அறிவிப்பு

சென்னை: ஜன.10–

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக தமிழக வெற்றிக் கழகம் சார்பில் குழுவினை அமைத்து அக்கட்சியின் தலைவர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்தையும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட இருக்கிறது.

இதற்காக சிறப்பு குழு அமைக்கப்படுகிறது. இந்த குழு தமிழகம் முழுவதும் பொதுமக்கள் சிறு குறு தொழில் அமைப்புகள், தொழிலாளர் அமைப்புகள், பொருளாதார மற்றும் தொழில் வல்லுநர்கள், வர்த்தக சபைகள், பல்வேறு ஊழியர் சங்கங்கள், விவசாய சங்கங்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மகளிர் அமைப்புகள், இளைஞர் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கருத்துக்களையும் தேவைகளையும் அறிந்து தரவுகளை பெற உள்ளது.

அவர்களிடமிருந்து பெறப்படும் தரவுகளின் அடிப்படையில், தமிழ்நாட்டு மக்களையும், ஒட்டுமொத்த மாநிலத்தையும் வளர்ச்சி பாதையில் கொண்டு செல்லும் வகையில் தேர்தல் அறிக்கையினை தயார் செய்ய உள்ளது.

தேர்தல் அறிக்கை குழு விவரம்: கே.ஜி.அருண்ராஜ், ஜே.சி.டி.பிரபாகர், ஏ. ராஜ்மோகன், டி.எஸ்.கே.மயூரி, ஏ.சம்பத்குமார், எம்.அருள் பிரகாசம், விஜய் ஆர். பரணி பாலாஜி, முகமது பர்வேஸ், டி.கே.பிரபு, கிறிஸ்டி பிரித்வி, தேன்மொழி பிரசன்னா, எம்.சத்ய குமார்.மேற்கண்ட குழுவினருக்கு கழகத் தோழர்கள் முழு ஒத்துழைப்பு நல்குவதோடு, அந்தந்த பகுதிகளில் சம்பந்தப்பட்ட அமைப்புகளை சந்திக்கும் பொழுது தேவையான உதவிகளை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# "பராசக்தி\" படத்திற்கு 'யு/ஏ' சான்றிதழ்,, திட்டமிட்டபடி இன்று வெளியாகிறது ,

சென்னை, ஜன.10–

2026 புத்தாண்டில் வரும் முதல் பண்டிகையான பொங்கல் பண்டிகைக்கு சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவாகியுள்ள 'பராசக்தி' படம் வெளியாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.'பராசக்தி' படத்தில் சிவகார்த்திகேயன் ஹீரோ என்றாலும், ஜெயம் ரவி, அதர்வா ஆகியோரும் நடித்திருப்பதால் இப்படத்திற்கும் பலத்த எதிர்பார்ப்பு இருக்கிறது. 1965ம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்பு போரராட்டம் தொடர்பான கதை உருவாகியுள்ள 'பராசக்தி' படம் நாளை வெளியாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், இப்படத்திற்கு சென்சார் சான்றிதழ் வழங்குவதில் இழுபறி ஏற்பட்டது. ஜனநாயகன் படத்தை போலவே, 'பராசக்தி' படத்துக்கும் தணிக்கை சான்றிதழ் வழங்கப்படாமல் இருந்தது. தணிக்கை வாரியம் 'பராசக்தி' படத்தில் குறிப்பிட்ட காட்சிகளை நீக்க வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்த நிலையில்,இது தொடர்பான வழக்கு இன்று சென்னை ஐகோர்ட்டில் நடைபெற்றது.இந்த நிலையில், கோர்ட்டு உத்தரவின் பேரில் தணிக்கை வாரியம் பராசக்தி திரைப்படத்திற்கு யு/ஏ சான்றிதழ் வழங்கியது . இன்று (ஜன.10) திரைப்படம் வெளியாக உள்ள நிலையில் நேற்று (ஜன.9) தணிக்கை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இந்த படம் 2 மணி நேரம் 43 நிமிடங்கள் ரன் டைம் கொண்டுள்ளது.ஜனநாயகன் திரைப்பட வெளியீடு இன்னும் உறுதியாகாத நிலையில் பராசக்தி திரைப்படத்திற்கு கூடுதல் திரையரங்குகள் கிடைக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. ",

# புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஊராட்சி பேரூராட்சியாக தரம் உயர்வு:

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஊராட்சி பேரூராட்சியாக தரம் உயர்த்தி முதல் கட்ட அறிவிப்பு வெளியிட்டது தமிழ்நாடு அரசு. பொன்னமராவதி பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தியுள்ளது. ஆட்சேபனை மற்றும் கருத்துக்களை பொதுமக்கள் 6 வாரத்திற்குள் தெரிவிக்கலாம்

## மாவட்ட நீதிபதி திருவள்ளூர்

GWOP No.361 of 2025

K.சிவாஜி, ஆ/வ42,
த/பெ.குமாரசாமி,
எண்.3/343,
பிராமணர் தெரு,
கனகம்மாசத்திரம்,
திருத்தணி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

..... மனுதாரர் / வாதி

–எதிர்–

Dr.L.மதுரா,
பெ/வயது 38
த/பெ.உமா மகேஸ்வரன்,
எண்.711/2, அவிலாலா, சுப்பையா காலனி,
டென்னிஸ் மைதானம் அருகில்,
திருப்பதி 517501

.... எதிர் மனுதாரர் / பிரதிவாதி

**பொது அறிவிப்பு**

தாவா வழக்கானது சிறுவர் குழந்தைகளுக்காக மனுதாரரை சட்டப்பூர்வ பாது காவலர் மற்றும் நிரந்தர காவலில் கோர்ட் உத்தரவு செய்ய மனுதாரர் கோரிக்கை மனுவானது. இந்த மனுவிற்கு ஆட்சேபனை ஏதும் தெரிவிக்க பிரதிவாதி இந்த நீதி மன்றத்தில் 21.01.2026 அன்று காலை 10.00 மணிக்கு மேற்குறிப் பிட்ட நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறோம் தவறினால் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைப் பட்சமாக மனுதாரருக்கு சாதகமாக உத்தரவு பிறப்பிக்கப்படும்.

/நீதிமன்ற உத்தரவுப் படி
/D.LEMUVEL B.A.,B.L.,
வழக்கறிஞர், திருவள்ளூர்.
Mobile No.9940729727

## பொது அறிவிப்பு

வருவாய் கோட்டாசியர் அவர்கள் திருப்பூர் மாவட்டம்.

நாள்:16.12.2025 ந.க.6274/2025/ஆ2

திருமதி. யாஸ்மின்
த/பெ. கௌஸ்மைதீன் க.எண்:189/பி
குமரன் காலேஜ் மெயின் வீதி,
எஸ் .ஆர். நகர், ஆண்டிபாளையம், திருப்பூர் மாவட்டம்641687

....மனுதாரர்.

–இல்லை.–

...எதிர் மனுதாரர்.

மேற்கண்ட முகவரியில் வசிக்கும் திருமதி. யாஸ்மின் த/பெ. கௌஸ் மைதீன் என்பவர்.கரிய கவுண்டர் வீதி காதர் பேட்டை என்ற முகவரியில் 11.01.2022 கடந்த ஆண்டு தேதியன்று இறந்தது தொடர்பாக, அவரது |இறப்பினை அந்நேரத் தில் பதிவு செய்ய தவறிய நிலையில் கால தாமதக் கட்டணத்துடன் இறப்பு சான்று பதிவு செய்து தர வேண்டி வருவாய் கோட்டாட் சியர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார். இம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் இந்த அறிவிப்பு பிரதி வெளியான 15 நாட்களுக்குள் கனம் வருவாய் கோட்டா ட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது அவசியம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்,
திருமதி. ஜாஸ்மின்



மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழில் பூங்காவில் மாபெரும் தூய்மைப் பணியை தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் செயற்பொறியாளர் (சிப்காட், சென்னை) திருவருள் உட்பட பலர் உள்ளனர்.




வருகின்ற தை பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழகத்தில் உள்ள அரிசி ரேஷன் அட்டைதாரர்களுக்கு முழு கரும்புடன் கூடிய பொங்கல் தொகுப்பு மற்றும் ரூபாய் 3000 ரொக்க பணம் ஆகியவற்றை வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஈரோடு மாநகராட்சி 20 வது வார்டு பகுதியில் பொங்கல் தொகுப்பு பொதுமக்களுக்கு வழங்கும் விழா நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம் மற்றும் திமுக வார்டு பகுதி நிர்வாகிகள் பொங்கல் தொகுப்பை பொதுமக்களுக்கு வழங்கினர்.



ஈரோடு மாவட்டம் கஸ்பா பேட்டை பகுதியில், வருகின்ற பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழக அரசு அறிவித்துள்ள, முழு கரும்புடன் கூடிய பொங்கல் தொகுப்பு மற்றும் ரூபாய் 3000 ரொக்க பணம் ஆகியவற்றை, அமைச்சர் சு. முத்துசாமியின் அறிவுறுத்தலின்படி, மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் சு. குணசேகரன் மேற்பார்வையில், மாவட்ட திமுக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் பேட்டை பெரியசாமி, பன்னிரண்டாவது வார்டு திமுக நிர்வாகி நடேச பிரஸ் மு. செந்தில்குமார், நிர்வாகிகள் குணா பாலாஜி, ஜெகதீஷ் உள்ளிட்ட திமுகவினர் மற்றும் பொதுமக்கள் பொங்கல் தொகுப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

# லிட்டருக்கு விலை உயருமா..? பாலை ரோட்டில் ஊற்றி போராட்டம்

## சேலத்தில் அரசுக்கு விவசாயிகள் விடுத்த இறுதி எச்சரிக்கை.

சேலம். ஜன. 10–

சேலம் மாவட்டம் சங்ககிரியில் பால் உற்பத்தியாளர்கள் நடத்திய அதிரடியான நூதனப் போராட்டம் ஒட்டுமொத்த தமிழகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.



கால்நடை தீவனங்களின் விலை முன்னெப்போதும் இல்லாத வகையில் 40% வரை உயர்ந்துள்ள நிலையில், வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் தங்கள் கறவை மாடுகளுடன் சாலை மறியலில் குதித்தனர். ஆத்திரமடைந்த விவசாயிகள், தாங்கள் கஷ்டப்பட்டு கறந்த பாலை சாலையில் ஊற்றி அரசுக்கு எதிராகக் கோஷமிட்டது அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

"ஒரு பக்கம் தீவன விலை உயர்வு, மறுபக்கம் போதிய கொள்முதல் விலை இல்லை; கடனை அடைக்கவே கையில் காசு இருப்பதில்லை" எனப் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் கண்ணீர் மல்கத் தெரிவித்தனர். ஆவின் மற்றும் தனியார் நிறுவனங்கள் உடனடியாகக் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும், இல்லையெனில் பால் விநியோகத்தை முற்றிலுமாக நிறுத்தப் போவதாக விவசாயிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்தத் திடீர் போராட்டத்தால் சங்ககிரி நெடுஞ்சாலையில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

# டெல்லி சிபிஐ அலுவலகத்தில் த.வெ.க. தலைவர் விஜய், ஜனவரி 12ம் தேதி ஆஜராக உள்ளார்

சென்னை: ஜன.10–

த.வெ.க. தலைவர் விஜய், ஜனவரி 12ம் தேதி சிபிஐ முன் ஆஜராக உள்ளார். தவெக நிர்வாகிகளிடம் நடந்த விசாரணையை தொடர்ந்து விஜயிடம் சிபிஐ விசாரணை நடத்த உள்ளது. கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த வழக்கு தொடர்பாக விஜயிடம் சிபிஐ விசாரணை நடத்த உள்ளது. டெல்லி சிபிஐ அலுவலகத்தில் விஜய் விசாரணைக்கு ஆஜராக ஏற்கனவே சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. விசாரணைக்கு ஆஜராக விஜய் ஜனவரி 11ம் தேதி டெல்லி செல்கிறார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421